Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

26.04.2020 ஞாயிற்றுக்கிழமை

## திருமலையில் கொரோனா!

திருகோணமலை, ஏப். 26
திருகோணமலையில் முதலாவது கொரோனா தொற்றாளர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளார். கடற்படைச் சிப்பாயே இவ்வாறு அடையாளங்காணப்பட்டுள்ளார். அதனால் பொதுமக்கள் இனி மேல் மிக மிக அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று திருகோணமலை சுகாதார மருத்துவ அதிகாரி கோரிக்கை விடுத்துள்ளார். வெலிசறை கடற்படை முகாமில் பணியாற்றி விடுமுறையில் இருந்த ஸ்ரீ திசபுரா கிராம உத்தியோகத்தர் பிரிவு கிராமத்தில் வசிக்கும் சிப்பாய்க்கே கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

(முன்னர் வந்த செய்தி 03ஆம் பக்கத்தில்)

## இளம் பெண் சடலமாக மீட்பு


யாழ்ப்பாணம், ஏப்.26
யாழ்ப்பாணம், அரியாலைப் பகுதியில் உள் வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் இன்று காலையில் பெண் ஒருவர் இன்று காலையில் சடலமாக மீட்டுப்பட்டுள்ளார்.

2

## முல்லைத்தீவில்
## 71 சிப்பாய்கள் தனிமைப்படுத்தல்!

கொழும்பு, ஏப்.26
அண்மையில் விடுமுறையில் வீடுகளுக்குச் சென்று திரும்பிய முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமையாற்றும் 71 இராணுவச் சிப்பாய்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என முல்லைத் தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

2





# வெலிசறை கடற்படையினர் 90 பேருக்கு 'கொரோனா'!

கொழும்பு, ஏப்.26
வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த 90 சிப்பாய்கள் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

2

## கொரோனா 471

- 120 பேர் குணமடைவு
- 344 பேர் சிகிச்சையில்
- 273 பேருக்கு தொற்று அறிகுறி

கொழும்பு, ஏப்.26
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய 11 பேர் இன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதைத் தொடர்ந்து தொற்றுக்குள்ளாகியவர்களின் மொத்த எண்ணிக்கை 460 இலிருந்து 471ஆக உயர்ந்துள்ளது. இன்று அடையாளம் காணப்பட்டுள்ள இவருவரும் கொழும்பு 05, நாரஹேன்பிட்டி, தாபரே மாவத்தையைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று கொரோனா வைரஸ் தொற்றுடன் 40 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நேற்றிரவு 11 மணி

2

## கடற்படை அதிகாரி வெலிசறையில் சாவு
### எலிக்காய்ச்சலே காரணமாம்



கொழும்பு, ஏப்.26
வெலிசறை கடற்படை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்த கடற்படை அதிகாரிக்கு கொரோனா வைரஸ் பரவவில்லை என் பது பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

2



## எரியுண்ட நிலையில் ஆணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,ஏப்.26
மயிலங்காடு முருகமூர்த்தி ஆலயத்துக்கு அண்மித்த பகுதியில் எரிந்த நிலையில் வயதான ஆண் ஒருவரின் சடலம் பொலிஸாரால் இன்றுகாலை மீட்கப்பட்டது. மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த நடேசமூர்த்தி (வயது 82) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(ஐ-20,114)

## அக்கராயன் மருத்துவமனை "கொரோனா" சிகிச்சைக்கு!

யாழ்ப்பாணம், ஏப்.26
வட மாகாணத்துக்கான கொரோனா வைத்தியசாலையாக அக்கராயன்குளம் பிரதேச வைத்தியசாலை மாற்றப்படவுள்ளது என சுகாதார திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது நாட்டில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில் மாகாணத்திற்கொரு கொரோனா மருத்துவமனையை உருவாக்கும் வகையில் வட மாகாண கொரோனா வைத்தியசாலையாக கிளிநொச்சி அக்கராயன்குளம் பிரதேச வைத்தியசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.
அதைத் தொடர்ந்து அக்கராயன் மருத்துவமனையில் இடம்பெற்ற வைத்திய சேவைகளில் சிலவற்றை ஸ்கந்தபுரம் ஆயுள்வேத மற்றும் பொதுக் கட்டடங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற அறிவித்தல் வைத்தியசாலை நிர்வாகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

2

## வடக்கு மருத்துவமனைகளில் முகக்கவசத் தட்டுப்பாடு
### பணியாளர்கள் அச்சத்தில்

யாழ்ப்பாணம், ஏப். 26
"மருத்துவமனைகளை முன்னர் போன்று இயக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறியுள்ளாரெனினும், முகக்கவசம், தனிநபர் பாதுகாப்பு அங்கிகளுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. இது சுகாதார சேவைகளில் ஈடுபடுபவர்களுக்கு அச்சமாகவுள்ளது" என்று தெரிவித்துள்ளது, அரச மருத்துவ

2

## இளம் பெண்...

சடலமாக மீட்கப் பட்டவர் யாழ்ப்பாணம் ,அரியாலைப் பகுதி யைச் சேர்ந்த டில்சான் பிரதீபா (வயது 31) எனும் ஒரு பிள்ளையின் தாயாராவர்.
சடலம் பிரேத பரிசோத னைக்காக யாழ்ப்பா ணம் போதனா மருத்து வமனையில் வைக்கப் பட்டுள்ளது.
விசாரணைகளை மேற் கொண்ட யாழ்ப்பா ணம் பொலிஸார் சந்தே கத்தின் பேரில் அவரு டைய கணவனை கைது செய்துள்ளனர். (ந-26)

## வடக்கு மருத்துவமனைகளில்...

அதிகாரிகள் சங்க வடக்குக் கிளை.
இது பற்றி சங்கத்தின் வடக்கு இணைப்பாளர் மருத்துவர் த.காண்டீபன் விடுத்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதா வது:
மருத்துவமனைகளை முன்னர் போன்று இயக்கு மாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சுற்றறிக்கை மூலம் கேட் டுக்கொண்டுள்ளார். ஆயி னும் அவ்வாறு சேவை களை விஸ்தரிக்க பல மருத்துவமனைகளிலும் இன்னமும் முகக்கவசம் மற்றும் தனிநபர் பாது காப்பு அங்கிகளுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. நோயாளிகள் வரும்போது சரியான தடுப்பு நடவடிக் கைகள் எடுக்கப்படாவிட் டால் நோயாளிகளிடம் இருந்து சுகாதாரப் பணியா ளருக்கு கொரோனா தொற்ற லாம். இதனால் சுகாதார சேவைகளில் ஈடுபடுபவர்க ளுக்கு அச்சம் ஏற்பட்டுள் ளது. என்று குறிப்பிட் டுள்ளார். (த-20)



## 71 சிப்பாய்கள்...

வைத்தியர் சுகந்தன் தெரிவித்துள்ளார்.
கடந்த 21ஆம் திகதி விடுமுறை நிறைவு செய்து முல்லைத்தீவு மாவட்டத்துக்குத் திரும்பும்போது இவர்களுடன்கூடப் பயணித்த வெலிசறை கடற்படை முகா மில் பணியாற்றும் ஸ்ரீபுரவைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாய் கொரோனாத் தொற் றுக்குள்ளாகியுள்ளார். அதையடுத்து ஏனையோரைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள் ளன.
புதுமாத்தளன் பகுதில் உள்ள இராணுவப் பயிற்சி முகாமில் புதிதாக அமைக்கப் பட்ட தனிமைப்படுத்தல் முகாமில் 71 படையினரையும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. அவர்களில் 38 பேர் இன்று காலை அந்தத் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமையாற் றும் படையினர் விடுப்பில் வீடு சென்ற நிலையில் கடந்த 21ஆம் திகதி ஒழுங்குப டுத்தபட்ட தனியார் பஸ் ஒன்றில் கட மைக்குத் திரும்பியுள்ளனர். வெலிஓயா வைச் சேர்ந்த தனியார் ஒருவரின் பஸ்ஸில் அவர்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர்.
அந்த பஸ்ஸில் விடுப்பில் வீடு திரும்பிய வெலிசறை கடற்படை முகாமில் கடமை யாற்றும் கடற்படைச் சிப்பாய் ஒருவரும் பயணித்துள்ளார். அவர் அநுராதபுரம் ஸ்ரீபுர என்ற இடத்தில் இறங்கியுள்ளார். அவ ருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள் ளமை பின்னர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இந்த பஸ் வெலிஓயா, முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு, புதுக்குடியிருப்பு படை முகாம்களுக்குச் சென்று படையினரை இறக்கியுள்ளது. சுமார் 71 படையினர் இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தில் குறிப்பிட்ட முகாம்களில் இறங்கியுள்ள னர். அவர்களை இனங்கண்டு புதுமாத்தளன் தனிமைப்படுத்தல் நிலை யத்துக்கு அழைத்துச் சென்று தனிமைப்ப டுத்தலில் வைக்க இராணுவத்தினர் நடவ டிக்கை எடுத்துள்ளனர்.
அத்துடன், பஸ்ஸை செலுத்திய சாரதி மற்றும் நடத்துநரையும் தனிமைப்படுத்த லுக்கு உட்படுத்தும் நடவடிக்கையையும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் பணிமனை மேற்கொண் டுள்ளது. இந்த பஸ்ஸில் பயணம் செய்து மணலாறு பகுதியிலுள்ள படை முகாம் ஒன்றில் இறங்கிய சிப்பாய்கள் இருவருக் குக் காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்ட நிலையில் அவர்கள் இருவரையும் மேலதிக பரிசோதனைக்காக அநுராதபுரம் வைத்தி யசாலைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் கூறினார். இதேவேளை, பஸ்ஸில் வந்தவர் கள் எந்தெந்த இடங்களில் தரித்து நின்ற னர்? கடைகளுக்குச் சென்றனரா? போன் றவை தொடர்பிலும் விசாரணைகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன. (எ-22,19)

## வெலிசறை...

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது
இதுவரை கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ள 90 கடற்ப டைச் சிப்பாய்களில் 68 பேர் வெலிசறை கடற்படை முகாமுக்குள் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஏனைய 22 பேரும் விடுமுறையில் வீடுக ளுக்குச் சென்றிருந்த நிலையில் மருத்துவமனையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
நேற்று மட்டும் 20 சிப்பாய்கள் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். அதில் 10 பேர் கடற்படை முகா முக்குள் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது அடையாளம் காணப்பட்டனர். ஏனைய 10 பேரும் அவர்களின் வீடுகள் அமைந்துள்ள மாவட்ட வைத்தியசாலைகளில் அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.
அதேவேளை, வெலிசறை கடற்படை முகாமில் பி.சி.ஆர். பரி சோதனை தொடர்ந்து இடம்பெறுகின்றது. விடுமுறையில் சென்ற சிப்பாய்களும் மீள அழைக்கப்பட்டு பி.சி.ஆர். பரிசோ தனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் - என்றார். (எ-22)

## கொரோனா 471

வரை 32 பேரும், அதன்பின்னர் இரவு 11.45 மணியளவில் மேலும் 8 பேரும் அடை யாளம் காணப்பட்டுள் ளனர். அவர்களில் 20 பேர் வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த சிப்பாய்களாவர். 4 பேர் கடற்படைச் சிப்பாய்களின் உறவினர்க ளாவர். 16 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்க ளில் தங்கவைக்கப்பட்டவர்களாவர்.
கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையா ளம் காணப்பட்டுள்ள 471பேரில் தற்போது 344 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுவரை 120 பேர் தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 7 பேர் உயிரி ழந்துள்ளனர். அதேவேளை, 273 பேர் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் வைத்தியசாலைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (எ-22)

## கடற்படை அதிகாரி...

என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் இசுரு சூரியபண்டார தெரி வித்தார்.
கடற்படையில் லெப்டி னன்ட் கொமாண்டரா கச் செயற்பட்ட அதி காரி திடீர் சுகவீனம் காரணமாக கடந்த 18 ஆம் திகதி வெலிசறை கடற்படை மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டுச் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.
எலிக்காய்ச்சல் கார ணமாகவே அவர் உயிரிழந்துள்ளார். அவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகவில்லை என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித் துள்ளார். கடற்படை அதிகாரி சிகிச்சை பெற்று வந்த அறை யில், சிகிச்சை பெற்ற மற்றுமொரு கடற் படை அதிகாருக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளதால், உயிரிழந்தவரின் சடலத்தை சர்வதேச தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் தகனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள் ளார். (க-44)

## அக்கராயன்....

அக்கராயன் பிரதேச வைத்தியசாலையானது 15 கிராமங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு சேவை வழங்குகின்ற ஒரு பிரதேச வைத்திசாலை எனவும், போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை வசதிகளற்ற நிலையில் இந்த வைத்தியசா லையை நம்பி வாழ்கின்ற பொது மக்களுக்கு உரிய மாற்று ஏற்பாடுகள் இன்றி குறித்த வைத்தியசாலை தெரிவு செய்யப்பட்டமை மக்கள் மத்தியில் எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளது. கிளிநொச்சி மாவட் டத்தில் கொரோனா நடவடிக்கைகளுக்கு என முழங்காவில் கடற்படை தனிமைப்படுத்தல் நிலை யம், இரணைமடு விமானப்படை தனிமைப்படுத்தல் நிலையம், பளை தனிமைப்படுத்தல் நிலையம் என்பன காணப்படுவதோடு. தற்போது அழகாபுரி பாடசாலை யையும் விமானப்படையினர் பொறுப்பேற்றுள்ளனர்.
அக்கராயன் வைத்தியசாலையை கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றுவது தொடர்பில் கிளிநொச்சி பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சரவணபவனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்த விடயம் தொடர்பில் தனக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை. தனக்கு எதுவும் தெரியாது என்றும் இது விடயம் தொடர்பில் மாகாண சுகாதாரத் திணைக்களத்துடனேயே தொடர்பு கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். (ப-214)

# ரணிலின் செயல்களாலே வாய்ப்புகள் பறிபோயின!

## அம்பலப்படுத்துகிறார் கிரியல்ல

கொழும்பு, ஏப். 26

ரணில் விக்கிரமசிங்கவின் தன்னிச்சை யான செயற்பாடுகள் காரணமாகவே அன்று நாடாளுமன்றத்தை முன்கூட் டியே கலைக்கவேண்டிய நிலை ஜனாதி பதியாக இருந்த சந்திரிக்காவுக்கு ஏற்பட்டது என்று முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் நம்பிக்கைக் குரிய பாத்திரமாக திகழ்ந்த லக்ஷ்மன் கிரியல்ல தற்போது சஜித் அணியுடன் சங்கமித்துள்ளார். இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்கவை ஏன் கைவிடவேண் டிய நிலை ஏற்பட்டது என்பது குறித்து அவர் தவவல்களை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ரணில் விக்கிரமசிங்கவுக்கு இரண்டு தடவைகள் நாம் ஆட்சியைக் கைப்பற் றிக்கொடுத்தோம். ஆனால், அந்த இரண்டு சந்தர்ப்பங்களையுமே அவர் உரிய வகையில் பயன்படுத்தவில்லை. தான் பிரதமராக இருந்தாலும் ஜனாதி பதிக்கும் அதிகாரங்கள் உள்ளன என்பதை அவர் உணர்ந்திருக்கவேண் டும். அமைச்சரவைக் கூட்டத்துக்கு வரும்போது சந்திரிக்காவின் கைப்பை யில் 'கமரா' இருப்பதாக சந்தேகப் பட்டு, அமைச்சர் ஒருவர் ஊடாக நாடகம் அரங்கேற்றப்பட்டது. இதனால் சந்திரிக்கா சினம் கொண் டார். அவருடன் முரண்படாது இருந்திருந்தால் சிறப்பாகச் செயற்ப டக்கூடியதாக இருந்திருக்கும். சந்திரிக் காவை பகைத்துக்கொண்டதால் நான்கு அமைச்சுகளை அவர் சுவீகரித்துக்கொண்டார். பேச்சுகளின் பின்னர் , மூன்று அமைச்சுகளை மீளக் கையளிப்பதாகவும், ஒரு அமைச்சை இரண்டொரு மாதங்களில் வழங்குவ தாகவும் சந்திரிக்கா கூறினார். ஆனால், அனைத்தும் வேண்டும், இல்லாவிட் டால் ஒன்றும் தேவையில்லை என ரணில் குறிப்பிட்டார்.

இறுதியில் என்ன நடந்தது? முன்கூட் டியே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. அதேவேளை, 2015 இல் ரணிலை மீண்டும் பிரதமராக்கினோம். ஆனால், பிணை முறி விவகாரம் மூலம் பழைய நிலை மையே ஏற்பட்டது- என்றார். (ப-44)

# கசிப்புடன் மூவர் கைது

பளை, ஏப்.26

பளை முகமாலைப் பகுதியில் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் 400 லீற்றர் கோடாவும் உற்பத்தி செய்யப்பட்ட கசிப்பும் பளைப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததால் ரோந்து வந்த பொலிஸாரைக் கண்ட இருவர் கையில் வைத்திருந்த போத்தல்களை தூக்கி வீசியுள்ளனர். அதை அவதானித்த பொலிஸார் இருவரையும் விசாரணை செய்த போது அது கசிப்பு என்று கண்டறியப்பட்டுள்ளது.

அதன்பின்னர் அவர்களை அழைத்துக் கொண்டு கசிப்பு விற்பனை செய்யப்பட்ட இடத்துக்குப் பொலிஸார் சென்றுள்ளனர். அங்கு கிணறு ஒன்றுக்கு அருகில் உற்பத்திக்குத் தயாரான நிலையில் வைக்கப்பட்டிருந்த 400 லீற்றர் கோடாவும் உற்பத்தி செய்ப்பட்ட கசிப்பும் கைப்பற்றப்பட்டன. அவர்கள் இருவரும் வழங்கிய தகவலின் அடிப்படையில் கசிப்பு உற்பத்தி செய்த சந்தேகத்தில் மேலும் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட மூவரையும் சான்றுப் பொருட்களுடன் பளைப் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். (ந-9)



# தபால் நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப்.26

புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ துர்க்கா சனசமூகநிலைய வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தபால் நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும், குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தின் ஊடாக கனடா குமரன் விளையாட்டுக் கழகத்தினது பங்களிப்பில் இந்த தபாலகம் அமைக்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண பிரதி தபால்மா அதிபர் திருமதி மதுமதி வசந்தகுமார் மற்றும் சமூக ஆர்வலர் இரத்தினசிங்கம் கெங்காதரன் ஆகியோர் இணைந்து கட்டடத்தை திறந்து வைத்தனர். (ஐ-222)

# திருகோணமலையில் கொரோனா இல்லை!

## மருத்துவ நிபுணர் அநுராத தெரிவிப்பு

திருகோணமலை, ஏப்.26

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை எவருக்கும் கொரோனாத் தொற்று ஏற்படவில்லையென திருகோணமலை பொது மருத்துவமனையின் நுண்ணுயிரியல் மருத்துவ நிபுணர் அநுராத ஜயதிலக தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக முகநூல் ஊடாக வதந்திகள் பரவியிருந்த நிலையில், அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா எனச் சந்தேகத்தின் பேரில் திருகோணமலை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஏழு நோயாளர்களின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது எவருக்கும் கொரோனாத் தொற்று இருக்கவில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை 70 வயதுடைய பெண்ணொருவர் திருகோணமலை பொது மருத்துவமனையில் உயிரிழந்த நிலையில், அவருக்கு கொரோனா இருக்கலாம் என்ற சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. எனினும் அவருடைய மாதிரிகள் மட்டக்களப்பு மற்றும் அநுராதபுரம் போன்ற இடங்களில் பரிசோதனை செய்யப்பட்டு கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக சந்தேகமான நோயாளிகளின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. பொய்யான வதந்திகளை நம்ப வேண்டாம். பொதுமக்கள் மிகவும் அவதானமாக சிந்தித்து செயற்பட வேண்டும். சுகாதாரத் திணைக்களம் வழங்கும் அறிவுறுத்தல்களை பின்பற்றி நடக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந)

# மாணவர் குழுவொன்று இன்று நாடு திரும்பும்!

கொழும்பு, ஏப்.26

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையைச் சேர்ந்த மாணவர்கள் கொண்ட குழுவொன்று இன்று நாடு திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் கோயம்புத்தூரில் உள்ள மாணவர்களே இன்று மாலை நாடு திரும்பவுள்ளனர் என்று ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

லாகூர், கராச்சி, அமிர்தசரஸ், காத்மாண்ட் மற்றும் மும்பையைச் சேர்ந்த 453 மாணவர்கள் இதுவரை நாடு திரும்பியுள்ளனர். நாட்டுக்கு வரும் அனைத்து மாணவர்களையும் சுகாதார அமைச்சின் ஆலோசனைகளுடன் தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களுக்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பங்களாதேஷின் டாக்கா, இந்தியாவின் பெங்களூர் ஆகிய பகுதிகளிலிருந்து செவ்வாய்க்கிழமை மற்றொரு தொகுதி மாணவர்களும் நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

இந்த நாடுகளின் அனுமதியுடன் சிறப்பு விமானங்கள் மூலமாக ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் இவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. (எ)

# மட்டக்களப்பு நகர் பகுதியில் தொற்று நீக்கும் செயற்பாடு!

மட்டக்களப்பு, ஏப்.26

மட்டக்களப்பு மாநகரம் உட்பட பல பகுதிகளில் தொற்று நீக்கும் பணிகள் மட்டக்களப்பு மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டம் உட்பட 19 மாவட்டங்களில் நாளை காலை ஊரடங்கு சட்டம் தளர்த்தப்படவுள்ள நிலையில் மக்கள் அதிகமாக வந்து செல்லும் பகுதிகளில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இந்தத் தொற்று நீக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரின் கலகத் தடுப்பு தண்ணீர் அடிக்கும் வாகனத்தின் உதவியுடன் இந்தத் தொற்றுநீக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவனின் நேரடி வழிநடத்தலின் கீழ் மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்கள், வீதிகள், பிரதான பேருந்து நிலையம், பிரதான தனியார் பேருந்து நிலையம், பொதுச்சந்தை மற்றும் பொதுமக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நடவடிக்கைகளில் மாநகரசபை ஊழியர்கள், பொலிஸார், இளைஞர்கள், மாநகரசபை உறுப்பினர்கள் எனப் பலர் ஈடுபட்டனர். (எ)



# நீதிமன்று உத்தரவிட்டால் மட்டுமே நாடாளுமன்றம்!

## கரு ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.26

நீதிமன்றம் உத்தரவிட்டால் மாத்திரமே தன்னால் பழைய நாடாளுமன்றத்தைக் கூட்ட முடியும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஜூன் மாதம் 2 ஆம் திகதிக்கு முன் புதிய நாடாளுமன்றத்தைக் கூட்ட முடியாது போனால் பழைய நாடாளுமன்றத்தைக் கூட்டுங்கள் என்று பல கட்சிகள் கரு ஜயசூரியவுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

எனினும் நீதிமன்றம் உத்தரவிடாமல் என்னால் ஒருபோதும் நாடாளுமன்றத்தைக் கூட்ட முடியாது என்று கரு ஜயசூரிய கூறியுள்ளார். (எ)

# ஊரடங்கை மீறிய 37,355 பேர் கைது

கொழும்பு, ஏப்.26

ஊரடங்கு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 37 ஆயிரத்து 355 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 9 ஆயிரத்து 561 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

கொவிட் 19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட பொலிஸ் ஊரடங்குச் சட்டம் கொழும்பு ,கம்பஹா,களுத்துறை ,புத்தளம் ,வரக்காபொல , அலவத்து கொட மற்றும் அக்கரைப்பற்று ஆகியப் பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகளுக்கு தளர்த்தப்பட்டுள்ளது. இதேவேளை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8 மணிமுதல் நாளை திங்கட்கிழமை அதிகாலை 5 மணிவரை மீண்டும் நாடளாவிய ரீதியில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஆறு மணி வரையிலான 24 மணித்தியாலயத்துக்குள் மாத்திரம் 681 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 177 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.(ஐ)

# பாடத்திட்டத்தை பெயரிடவும்

## ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஏப்.26

புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் நடைபெறவிருக்கும் ஏனைய பரீட்சைகளுக்கு மான வினாத்தாள்களை தயாரிப்பதற்கான பாடத் திட்டங்களை பெயரிடுமாறு, தேசிய ஆசிரியர்கள் சங்கம் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர், மாண வர்கள் இந்த நாள்களில் தமக்கு நடைபெறப்போகும் பொதுப் பரீட்சை பாடத் திட்டங்கள் தொடர்பில் ஏற்படும் சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்று தெரிவித்துள்ளார். இது தொடர்பில் கல்வி அமைச்சின் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரியுள்ளார். (ந)

# சா/த பரீட்சை முடிவுகள் இரு நாள்களில்

கொழும்பு, ஏப்.26

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்வரும் இரண்டு தினங்களுக்குள் வெளியிடுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதிக் கட்டப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பரீட்சைப் பெறுபேறுகள் பாடசாலைகளுக்கு தபால் மூலம் அனுப்பப்படாது. பெறுபேறுகளை இணையத்தின் மூலம் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கும் வழிமுறைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

பெறுபேற்று பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வலய மற்றும் மாகாண கல்வி பணிப்பாளர்களுக்கு கடவுச்சொல் மற்றும் பயனருக் கான பெயர்கள் வழங்கப்படவுள்ளன.

www.doenets.lk என்ற இணையத்தள முகவரிக்கு சென்று மாணவர்கள் தமது பெறுபேறுகளைப் பார்வையிட முடியும் எனத் தெரிவித்துள்ளார். (எ)

# நெருக்கடியை ஏற்படுத்த முயற்சிக்கிறது எதிரணி!

## விமல் குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப்.26

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்த் தரப்பினர் அரசமைப்பு நெருக்கடியைத் தோற்றுவிக்க முயற்சிக்கின்றனர் என்று கைத்தொழில் துறை அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஜனாதிபதியால் மாத்திரமே கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை, புதிய அரசு தோற்றம் பெற முன்னர் கூட்ட முடியாது என்பதை எதிர்க் கட்சியினர் நன்கு அறிந்தும் நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கு மாற்று வழிமுறைகளை தேடுகின்றார்கள். நாடு பெரும் சவால்களை எதிர்க்கொண்டுள்ள நிலையில் அரசமைப்பு ரீதியான நெருக்கடி மீண்டும் ஏற்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. கொரோனா வைரஸ் தாக்கத்தை குறிப்பிட்டுக் கொண்டு நாட்டை தொடர்ந்து முடக்க முடியாது. பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த அரசையே பொறுப்பேற்றுள்ளோம். கொரோனா வைரஸைக் காரணம் காட்டி அரசைப் பலவீனப்படுத்த அரசியல் சூழ்ச்சியை முன்னெடுக்கின்றார்கள். பொருளாதாரத்தை மேம்படுத்த சிறந்த திட்டங்கள் அனைத்து அமைச்சின் ஊடாகவும் செயற்படுத்தவுள்ளோம் -என்றார். (எ)

# மதுபானத்துடன் இருவர் கைது

ஹற்றன், ஏப்.26

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் டெதன்டி தோட்டப்பகுதியில் சட்ட விரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்டு வந்த இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. ஹற்றன் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது தேயிலை மலையில் வைத்து விற்பனையில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 200 மதுபான போத்தல்கள் மீட்கப் பட்டன. குறித்த மதுபானப் போத்தல்கள் அதிகவிலையில் விற்கபட்டதாகவும் ஹற்றன் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப-114)



# உழவர் சந்தை அமைக்க ஆலோசனைக் கூட்டம்

தென்மராட்சி, ஏப்.26

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்காலிக உழவர் சந்தை அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச சபைக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தவிசாளர் க.வாமதேவன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பெருமளவு விவசாய விளைநிலங்கள் உள்ளன. இவற்றின் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதில் ஏற்படும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யக்கூடிய வகையில் உழவர் சந்தை அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

தற்போதைய காலகட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கை பொருத்தமாக. இருந்தாலும் நாட்டுநிலைமை சீராக வரும்வேளையில் சபைக்கான சந்தை வருமானத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். இருப்பினும் உற்பத்தியாளர்களின் கோரிக்கைக்கு அமைவாக தற்காலிகமாக உழவர் சந்தைகள் அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தை நடத்தவுள்ளோம். இந்தக் கூட்டத்துக்கு உழவர்சந்தைகளைத் தற்போதைய காலகட்டத்தில் அமைப்பதால் ஏற்படக்கூடிய சாதக பாதக விளைவுகளைத் தெளிவுபடுத்தக்கூடிய துறைசார் அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர். எனவே உழவர் சந்தைகள் அமைப்பது தொடர்பான ஆலோசனைகளை வழங்கக் கூடியவர்கள் மட்டும் வருகை தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்- என்றார். (ஐ9)

# சொன்னதை கேட்காமையே கொரோனா பரவ காரணம்!

## சாடுகின்றார் ராஜித

கொழும்பு, ஏப்.26

பெப்ரவரியில் சஜித் பிரேமதாச எச்சரித்ததை அரசு செவிமடுத்தி ருந்தால், கொரோனாப் பரவலை நாட்டிலிருந்து கட்டுப்படுத்தியி ருக்கலாம் என முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று சனிக்கி ழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது:

உங்களுக்குத் தெரியும், கடந்த பெப்ரவரி 5 ஆம் திகதி எதிர்க் கட்சி என்ற வகையில், கொரோனா விவகாரம் தொடர் பாக சஜித் எச்சரிக்கை விடுத்திருந்தார். ஜனவரி மாதத் தில்தான் வுஹானில் இந்த வைரஸ் தோற்றம் பெற்றது. பின்னர் பெப்ரவரியில் கொரியா வுக்கு பரவியது. அதனால் அன்றே எதிர்க்கட்சித் தலைவர்



நாடாளுமன்றில் இது தொடர் பாக எச்சரித்திருந்தார்.

உலக சுகாதார ஸ்தாபனம் எச்ச ரிக்கை விடுத்துள்ளதை சுட்டிக்காட்டி, வைரஸை கட்டுப் படுத்துவதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு அரசி டம் கேட்டுக் கொண்டிருந்தார்.

விமான நிலைய பயணக் கட்டுப் பாடு, அனைவரும் முகக்கவசம் அணிவது, ஜனாதிபதி செயல ணியை உருவாக்குவது என முக்கி யமான மூன்று காரணங்களை தெரி வித்திருந்தார். அதற்கு சுகாதார அமைச்சரால் பலவீனமானதும் பொறுப்பற்ற வகையிலும்தான் இதற்கான பதில் வழங்கப்பட்டது.

சுற்றுலாத்துறையை கட்டுப்படுத் துவதை விடுத்து, தங்களின் வருமானத்துக்காகச் சுற்றுலாத் துறையை அதிகரிப்பது தொடர் பாகத்தான் அரசால் கவனம் செலுத்தப்பட்டது. ஏப்ரல் 19 ஆம் திகதியுடன் வைரஸ் பர வலை முற்றாக கட்டுப்படுத்தி விட முடியும் என சுகாதார அமைச்சர் கூறியிருந்தார்.

இவ்வாறான செயற்பாடுகள்தான் இலங்கையில் இடம்பெற்றது. இவர்கள் தேர்தலை விரைவில் நடத்துவதில் தான் மும்முரமாக ஈடுபடுகிறார்கள். இந்த சந்தர்ப் பத்திலேனும் அரசியல் பேதங் களை மறந்து ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.

தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபா வைச் செலவழிக்க முடியுமாக இருந்தால், அந்த பணத்தை கஷ்டப்படுபவர்களுக்கு வழங்க முடியும். பொதுத் தேர்தல் நடத்துவதற்கு அனைத்துத் தரப்பி னரும் எதிர்ப்பை வெளியிட்டு வரும்நிலையிலேயே, அரசு அதை நடத்துவதில் அக்கறை காட்டி வருகிறது- என்றார். (எ)



# மழை அதிகரிக்கலாம்

கொழும்பு, ஏப்.26

நாடு முழுவதும் மழையுடனான வானிலை இன்றிலிருந்து தற்காலிக மாக சற்று அதிகரிக்கலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, தென், வடமேல் மற்றும் ஊவா மாகாணங்க ளில் பல இடங்களில் பி.ப. 2 மணிக் குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல் மற்றும் தென் கரையோரப் பிரதேசங்களில் காலை வேளையிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ மாகாணத்திலும் களுத் துறை, நுவரெலியா,காலி மற்றும் மாத் தறை மாவட்டங்களிலும் சில இடங்க ளில் 50 மில்லி மீற்றர் அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப் படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத் துக்கொள்ள தேவையான முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவு றுத்தப்படுகின்றார்கள். சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப் படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புக ளில் காற்றானது தென்மேற்கு முதல் தென்கிழக்கு வரையான திசைகளிலி ருந்து வீசக்கூடும். காற்றின் வேகமா னது மணித்தியாலத்துக்கு 2030 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசந்துறை ஊடாக திருகோண மலை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. (எ)

# கசிப்பு உற்பத்தி; பெண் கைது

யாழ்ப்பாணம், ஏப்.26

உரும்பிராய் கிழக்கு பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 24 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டன என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய்ப் பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டுவ ருகின்றனர்.


இதேவேளை கோப்பாய் பொலிஸ் பிரிவில் கசிப்பு பைக்கற்களில் அடைத்து விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட் டில் மேலும் இருவர் கைது செய்யப்பட் டனர்.அவர்களிடமிருந்து 6 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-111)

# வவுனியா சிப்பாய்க்கு கொரோனா இல்லை!

வவுனியா, ஏப்.26

வெலிசறை கடற்படை முகாமில் பணியாற்றிய வவு னியாவை சேர்ந்த கடற்ப டைச் சிப்பாய்க்கு கொரோ னாத் தொற்று இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வெலிசறைக் கடற்படை முகாமில் பணியாற்றிய 60 க்கும் மேற்பட்ட கடற்ப டையினருக்கு கொரோ னாத் தொற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது. அந்த முகாமில் பணியாற்றும் வவுனியா வைச் சேர்ந்த கடற்படை உத்தியோகத்தர் ஒருவர் அண்மையில் வவுனியா மகாகச்சகொடி பகுதியில் அமைந்துள்ள தனது வீட்டுக்கு விடுமுறைக்கு வந்திருந்தார். அந்த உத்தி



யோகத்தர் சுய தனிமைப் படுத்தலுக்கு உள்ளாக்கப் பட்டுள்ளதுடன், வவு னியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை யால் மாதிரிகள் நேற்றுப் பெறப்பட்டன.

இந்த மாதிரிகள் அனுராத புரம் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட நிலை யில் அவருக்கு கொரோனா தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள் ளது. (ஐ110)

## ஊரடங்கு வேளையில்

# கசிப்பு விற்பனை அமோகம்! கிளிநொச்சியில் நால்வர் கைது

கிளிநொச்சி, ஏப். 26

ஊரடங்குச் சட்டம் நடைமுறை யில் உள்ள நிலையில் கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதிகளில் கசிப்புக் காய்ச்சு வது, மற்றும் விற்பனை செய்வது தாராளமாக இடம்பெறுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பொலிஸார், மற்றும் மது ஒழிப்புப் பிரிவினரின் சோதனை நடவடிக் கைகளையும் மீறி கசிப்பு விற்பனை இடம்பெற்று வருகிறது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு கசிப்பு விற்பனையில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதி யில் நால்வர் நேற்றுக் கைது செய் யப்பட்டுள்ளனர். கிளிநொச்சி, கல்லாறு, கட்டைக்காடு, கோர மோட்டைப் பகுதிகளிலிருந்தே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ள னர். அவர்களிடமிருந்து 115 லீற்றர் கசிப்பும், ஆயிரத்து 632 லீற்றர் கோடாவும் அதற்குப் பயன்படுத் தும் உபகரணங்களும் கைப்பற்றப் பட்டுள்ளன என்று தர்மபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

ஊரடங்குச் சட்டம் நடைமுறை யில் உள்ளபோது, மதுபான நிலை யங்கள் அனைத்தும் மூடப்பட் டுள்ளன. இந்தநிலையில் மதுப் பிரியர்களின் தேவையை நிறை வேற்றுவதற்கு இவ்வாறு பரவலா கக் கசிப்பு உற்பத்தி இடம்பெறுகி றது என்று சுட்டிக் காட்டப்பட்டுள் ளது. அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள், சமூக ஆர்வலர்கள் இது தொடர்பிலான தகவல்களை பொலிஸாருக்கோ, மது ஒழிப்பு பிரி வினருக்கோ வழங்கி சட்டவிரோத இந் தச் செயற்பாடுகளை முறியடிக்க உதவ வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ப-113)

## நிறமூட்டிய அரிசி விற்பனை நீதிமன்றம் அபராதம் விதிப்பு

மட்டக்களப்பு, ஏப்.26

நிறமூட்டப்பட்ட சிவப்பு அரிசியை விற்பனைக்காக களஞ்சியப் படுத்தியிருந்தவேளை, கைது செய்யப்பட்ட விற்பனை நிலைய உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேசத்தில் கடந்த முதலாம் திகதியன்று நடத்தப்பட்ட தற்காலிக சந்தையில், விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த அரிசி மாதிரியை ஆதாரமாகக் கொண்டு அந்த அரிசி கொள்வனவு செய்யப்பட்ட வர்த்தக நிலையம் மறுநாள் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி எம்.எச்.எம்.தாரிக் மற்றும் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.நௌபர் ஆகியோரின் வழிகாட்டலில் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளால் முற்றுகையிடப்பட்டது.

அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த சுமார் 9 மூடை அரிசி முத்திரையிடப்பட்டதுடன், அதில் சிறியளவு அரிசி தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்படி அரிசி நிறமூட்டப்பட்டமை உறுதி செய்யப்பட்டதையடுத்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் சுற்றுலா மன்றில் முன்னிலையாகி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, நீதிவானால் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் இவ்வாறு கலப்படம் செய்தமை கண்டுபிடிக்கப்படுமிடத்து, வர்த்தக நிலையத்தின் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும் என்று நீதிவான் எச்சரித்தார். (ந-150)

## குடும்பஸ்தர் படுகொலை!

### மனைவியின் சகோதரர் கைது

கொழும்பு, ஏப்.26

அநுராதபுரத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அநுராதபுரம் இஹலவெவ, ஸ்ரவஸ்திபுர பகுதியிலேயே நேற்று மாலை இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தனிப்பட்ட தகராறு நீண்டுகொண்டு சென்றதைத் தொடர்ந்து கூரிய ஆயுதமொன்றால் குறித்த நபர் தலையில் தாக்கப்பட்டுள்ளார். படுகாயமடைந்த அவர் அநுராதபுர மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த 46 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார். கொலையுண்டவரின் மனைவியின் இளைய சகோதரர் இந்தக்கொலையைப் புரிந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேக நபரை அநுராதபுர நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ-22)



## வறுமைக்கு உட்பட்ட மக்களுக்கு மீன்கள்

### வாழைச்சேனை மீனவர்கள் வழங்கினர்

மட்டக்களப்பு, ஏப்.26

மட்டக்களப்பு மாவட்டத்தில் போசாக்கு குறைபாடுகளுடன் காணப்படுகின்றனர் என்று சுகாதார திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்ட வறிய மக்கள் வாழும் கிராமங்களுக்கு வாழைச்சேனை மீனவர்களால் மீன்கள் வழங்கப்பட்டன.

அதனடிப்படையில் வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தின் மீனவர்களால் மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளரிடம் போசாக்கு குறைபாடுகளுடன் காணப்படும் மக்களுக்கான மீன்கள் கையளிக்கும் நிகழ்வு வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் இன்று நடைபெற்றது.

நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ருக்சன் குரூஸ், கோறளைப்பற்று மத்தி கடற்றொழில் பரிசோதகர் எஸ்.ஐ.முஹமட் இம்தியாஸ், வாழைச்சேனை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் என்.எம்.எம்.சிஹான், வாழைச்சேனை அல் அமான் படகு உரிமையாளர் சங்கம், அல்ஷபா மீனவர்கள் கூட்டுறவு சங்கத்தின் மீனவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தின் மீனவர்களால் மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்ட நிலையில் போசாக்கு குறைபாடுகளுடன் காணப்படும் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பூலாக்காடு, முறுத்தானை போன்ற கிராமத்தில் வாழும் அறுநூறு குடும்பங்களுக்கு வழங்குவதற்கு தலா ஒன்றரை கிலோ கிராம் எடையுடைய மீன்கள் கையளிக்கப்பட்டன. (ப-150)

## விமானப்படை தங்குவதற்கு கிளி. அழகாபுரி பாடசாலை

கிளிநொச்சி, ஏப்.26

கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அழகாபுரி அ.த.க.பாடசாலையை கிளிநொச்சி இரணைமடு விமானப்படையினர் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் பொறுப்பேற்றுள்ளனர்.

இரணைமடு விமானப்படையின் முகாமின் ஒரு பகுதி தற்போது கொரோனா தனிமைப்படுத்தல் நிலையமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றமையால் அங்குள்ள விமானப்படையினர் தற்காலிகமாகத் தங்குவதற்கு எனத் தெரிவித்து அந்தப் பாடசாலையை பொறுப்பேற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விமானப்படையின் அதிகாரிகள் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு அவரது அனுமதியுடன் பாடசாலையைத் தங்களின் தேவைக்கு பெற்றுள்ளதாக கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. பாடசாலையை சூழவும், கிராமத்திலும் பொது மக்கள் நெருக்கமாக வாழ்கின்ற பிரதேசம் என்பதால் பிரதேச மக்கள் மத்தியில் அச்சமான சூழல் நிலவி வருகிறது. அழகாபுரி பாடசாலை விமானப்படையினர் பொறுப்பேற்ற விடயம் தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

இந்தப் பாடசாலையை விமானப்படையினர் தங்குவதற்காக தற்காலிகமாக கோரியுள்ளனர். அவர்களது விமானப் படை முகாம் தனிமைப்படுத்தல் நிலையமாக இருப்பதனால் அங்குள்ள விமானப்படையினர் தங்குவதற்கே கோரியுள்ளனர். தற்போது தேசிய இடர்காலம் என்பதால் நாட்டின் அனைத்து துறைகளும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது கடமையாகும். இந்த நிலையில் பாடசாலையை ஆரம்பிப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன் பாடசாலையை மீள வழங்க வேண்டும் எனத் தெரிவித்தே வழங்கப்பட்டுள்ளது என்றார். (ஐ-214)

## தொண்டு நிறுவனங்களை உடன் கணக்காய்வு செய்க

### முல்லையில் இப்படிக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப். 26

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் கீழ், சமூக சேவைத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்கள் சமூக செயற்பாட்டு அமைப்புக்கள் அனைத்தும் கணக்காய்வு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

போரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களுக்கு சேவை வழங்கும் நோக்கில் 500க்கும் மேற்பட்ட சமூக சேவை நிறுவனங்கள் மக்களுக்கு பொருள்கள் மற்றும் உதவிகளை வழங்கி வருகின்றன. பெருமளவான நிறுவனங்கள் மாவட்டத்தின் சமூகசேவைத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான சமூக சேவை நிறுவனங்களுக்கு வெளிநாடுகளில் இருப்பவர்கள் நிதிகளை வழங்கி வருகின்றார்கள். இந்த நிதிப் பரிமாற்றத்தில் பெரும் மோசடிகள் இடம்பெற்று வருகின்றன என்று சிலர் குற்றம் சாட்டுகின்றனர்.

பல சமூகசேவை நிறுவனங்கள் தங்கள் வரவு செலவு நடவடிக்கையைச் சரியாகப் பேணுவதில்லை. வெளிநாடுகளிலிருந்து கோடிக்கணக்கான நிதி இவ்வாறான சமூக சேவை நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன. பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பொருள்கள் வடிவில் உதவிகளை வழங்கிவருகின்றார்கள். இந்த நிதிப்பரிமாற்ற நடவடிக்கையில் முறைகேடான பல செயற்பாடுகள் காணப்படுகின்றன என்றும் பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். அரச பதிவிலுள்ள நிறுவனங்களின் நிதி நடவடிக்கையை அரச நிர்வாகங்கள் கணக்காய்வாளர்கள் கணக்காய்வு செய்யவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-19)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 26.04.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.